செய்தி வெளியீடு எண்: 965 நாள்: 13.07.2024

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு இன்று (13.07.2024), பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**<u>நீர்வளத்துறை</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போரூர் ஏரியின் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு, வெள்ளப் பாதிப்புகளை தவிர்க்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதனடிப்படையில் நீர்வளத்துறையின் சார்பில் முதற்கட்டமாக ரூ.100 கோடி மதிப்பில் போரூர் ஏரியில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாமல் தடுக்க 2022–23ஆம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக, ரூ.84.93 கோடி மதிப்பில் மணப்பாக்கம் கால்வாய், கொளப்பாக்கம் கால்வாய் மற்றும் கெருகம்பாக்கம் கால்வாயில் வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், நீர்வளத்துறையின் சார்பில் ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் அருகில் உள்ள அடையாறு ஆற்றில் ரூ.24.80 கோடி மதிப்பில் மியாட் பாலம் முதல் விமான நிலையம் வரை மேற்கொள்ளப்பட்டு வரும் கரையைப் பலப்படுத்துதல், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி, மழைநீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமம், கொளப்பாக்கம் கால்வாயில் ரூ.23.28 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச் சுவர் அமைத்தல், அகலப்படுத்துதல் மற்றும் தூர்வாரும் பணியினையும், கெருகம்பாக்கம் கிராமம், கெருகம்பாக்கம் கால்வாயில் ரூ.34.45 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பருவமழைக்கு முன்பாக பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட செம்மொழி சாலை, மேற்குப் பகுதியில் உள்ள சதுப்புநில கால்வாயில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், சோழிங்கநல்லூர் மண்டலம், செம்மஞ்சேரி, நூக்கம்பாளையம் பாலம் அருகில் உள்ள கால்வாயில் 3,750மீ. நீளத்திற்கு ரூ.65 இலட்சம் மதிப்பிலும், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி ஏரியில் ரூ.30 இலட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத்தாமரைகள் மற்றும் கழிவுகள் அகற்றும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அகற்றப்படும் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்திடவும், இப்பணிகளை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நெடுஞ்சாலைத்துறை**

விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், பெருங்குடி மண்டலம், பல்லாவரம்–துரைப்பாக்கம் சாலையில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வரை 2,427 மீ. நீளத்தில் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினையும், தேனாம்பேட்டை மண்டலம், அண்ணாசாலை, அண்ணா மேம்பால அணுகு சாலையில் ரூ.8.45 கோடி மதிப்பில் ஜி.என்.செட்டி ஏ.ஆர்.எம் முதல் உத்தமர் காந்தி சாலை வரை மேற்கொள்ளப்பட்டு வரும் விடுபட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், சோழிங்கநல்லூர் மண்டலம், செம்மொழி சாலை, எல்காட் பகுதியில் ரூ.14 கோடி மதிப்பில் மேடவாக்கம்–சோழிங்கநல்லூர் குடுமியாண்டித்தோப்பு சாலையில் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு, தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி தரமாகவும், குறித்த காலத்திற்குள்ளும் பணியினை முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி**

தேனாம்பேட்டை மண்டலம், அடையாறில் உள்ள தொல்காப்பியப் பூங்காவில் ரூ.42.45 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொல்காப்பியப் பூங்காவின் பகுதி 1 மற்றும் 2ஐ இணைத்து சாந்தோம் சாலையில் ரூ.13 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள ஆகாயநடைபாதைப் பணிக்கான வரைபடத்தினைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி இப்பணியை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் ரூ.8.16 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் 3.40 கி.மீ. நீளத்திற்கு 400 மி.மீ. விட்டமுள்ள

பிரத்யேக நெகிழிரும்பு குடிநீர் குழாய் அமைக்கும் பணியினைக் கேட்டறிந்து பணியினை இம்மாத இறுதிக்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நியாயவிலைக்கடை**

முன்னதாக, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக்கம், திரு. வி.க.தெருவில் உள்ள கூட்டுறவுத்துறையின் நியாயவிலைக் கடையினைப் பார்வையிட்டும், மக்களிடம் கலந்துரையாடியும், பொருட்களின் இருப்பு மற்றும் விநியோகம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.அரவிந்த் ரமேஷ், கூடுதல் தலைமைச் செயலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர்/சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ். விஜய குமார், இ.ஆ.ப., நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ். அருண்ராஜ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜெ.பிரவீன்குமார், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு. ஆர்.துரைராஜ் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu